**மே – 21**

# TNPSC துளிகள்

❖ இந்தியப் பிரத்தியேகச் சரக்குப் போக்குவரத்து வழித்தடக் கழகம் (DFCCIL) ஆனது, மகாராஷ்டிர மாநிலம் ராய்காட் மாவட்டத்தில் உள்ள கலம்பொலியில் உள்ள இரயில் பாதைகளின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் மிக நீளமான (110.5 மீட்டர்) இரயில் மேம்பாலத்தினை வெற்றிகரமாகத் திறந்து வைத்துள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## வேளாண்மை, பால்வளம், மீன்வளத் துறைகளில் தமிழ்நாட்டின் சாதனைகள்




❖ இந்த மாநிலத்தின் சராசரி வேளாண் வளர்ச்சியானது, 2021 முதல் 2024 ஆம் ஆண்டு வரையில் சராசரியாக 5.66% சாதனை அளவை எட்டியுள்ளது.

❖ 2012-13 மற்றும் 2020-21 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் இது 1.36% ஆக இருந்தது.

❖ இம்மாநிலத்தில் 2020-21 ஆம் ஆண்டில் 36.07 லட்சம் ஹெக்டேராக இருந்த நீர்ப்பாசனப் பரப்பளவு ஆனது 2023-24 ஆம் ஆண்டில் 38.33 லட்சம் ஹெக்டேராக அதிகரித்தது.

❖ தமிழ்நாடு மாநிலமானது கேழ்வரகு மற்றும் கொய்யா உற்பத்தியில் இந்தியாவில் முதலிடத்தில் இருந்தது.

❖ மக்காச்சோளம், கரும்பு, புளி, மரவள்ளிக் கிழங்கு, மல்லிகை மற்றும் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தித் திறனில் தமிழகம் நாட்டிலேயே இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.


❖ கலைஞர் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 10,187 கிராமப் பஞ்சாயத்துகளில் 47,286 ஏக்கர் தரிசுநிலங்கள் சாகுபடி நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன.

❖ வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தின் கீழ், 62,820 விவசாயிகளுக்கு 499.45 கோடி

ரூபாய் மதிப்புள்ள வேளாண் இயந்திரங்கள் மற்றும் அதன் கருவிகள் மானியத்துடன் விநியோகிக்கப்பட்டன.

- ❖ மொத்தம் 1,652 புதிய வேளாண் இயந்திரங்கள் வாங்கப்பட்டு, இணைய வழி வாடகைச் சேவை மூலம், சுமார் 69,000 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.
- ❖ 27 மாவட்டங்களில் சுமார் 900க்கும் மேற்பட்ட குளங்கள் 1,212 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப் பட்டுள்ளன.
- ❖ 814 சிறு நீர்ப்பாசன குளங்கள் புதுப்பிக்கப்பட்டு, 24 மாவட்டங்களில் 88க்கும் மேற்பட்ட தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன.
- ❖ 2018-19 ஆம் ஆண்டில் 8,362 மெட்ரிக் டன்னாக இருந்த பால் உற்பத்தியானது, 2023-24 ஆம் ஆண்டில் 10,808 மெட்ரிக் டன்னாக உயர்த்தப்பட்டுள்ளது.
- ❖ 2018–2019 ஆம் ஆண்டில் 1,884.22 கோடி ரூபாயாக இருந்த வருடாந்திர முட்டை உற்பத்தி ஆனது, 2023–24 ஆம் ஆண்டில் 2,233.25 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.
- ❖ மீன்வளத் துறையில், மாநில அரசானது 1,428 கோடி ரூபாய் செலவில் 72 புதிய மீன்பிடி துறைமுக மையங்களை நிறுவியுள்ளது.

## பிராந்திய ஒருங்கிணைந்த கட்டளை வழங்கீட்டு வழி கட்டுப்பாட்டு மையங்கள்





- ❖ பெருநகர சென்னை மாநகராட்சியானது (GCC) விரைவில் பிராந்திய துணை ஆணையர் (RDC) அலுவலகங்களில் பிராந்திய ஒருங்கிணைந்த கட்டளை வழங்கீட்டு வழி கட்டுப்பாட்டு மையங்களை (RICCC) நிறுவ உள்ளது.
- ❖ ஏற்கனவே ரிப்பன் கட்டிட வளாகத்தில் செயல்பட்டு வரும் மத்திய ஒருங்கிணைந்த கட்டளை வழங்கீட்டு வழி கட்டுப்பாட்டு மையத்தின் (ICCC) முக்கிய செயல்பாடுகளைப் பிரதிபலிக்கும் வகையில் RICCC அமைக்கப்படும்.
- ❖ இது நிகழ்நேரக் கண்காணிப்பு, சம்பவக் கண்காணிப்பு மற்றும் சில பகுப்பாய்வுத் தகவல்கள் உள்ளடக்கிய முகப்புப் பக்கங்கள் போன்ற பல்வேறு செயல்பாடுகளுக்கு என்று ஆனதாகும்.
- ❖ இந்த அமைப்பானது நீர் மட்டம், காற்றின் தரம் மற்றும் மழைப்பொழிவு போன்ற சுற்றுச்சூழல் மற்றும் குடிமை உணர்வுக் கருவிகளிலிருந்து பெறப்படும் ஒரு தரவைச் செயலாக்கி, உள்ளூர் அவசரநிலைகளுக்கான எச்சரிக்கைகளை வழங்கும்.

- பொது குறை தீர்ப்பு (PGR) மென்பொருளை RICCC அமைப்புகளுடன் ஒருங்கிணைக்கும் இந்த மையங்களானது, பொதுமக்களின் குறைகள் மிகத் திறம்பட நிவர்த்தி செய்யப் படுவதை உறுதி செய்யும்.


## 2024-25 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் சொந்த வரி வருவாய்

- 2024-25 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் சொந்த வரி வருவாய் 7.6% அதிகரித்துள்ளது.
- 2024-25 ஆம் நிதியாண்டில் தமிழ்நாட்டின் சொந்த வரி வருவாய் சுமார் 1,80,225.53 கோடி ரூபாயாக இருந்தது.
- இது 2023-24 ஆம் நிதியாண்டில் பதிவான 1,67,105.18 கோடி ரூபாயிலிருந்து சுமார் 7.6% அதிகமாகும்.
- திருத்தப்பட்ட மதிப்பீடுகளில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் (SOTR) ஆனது, சுமார் 1,92,752.43 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- 2025-26 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டு மதிப்பீடுகளில் இது சுமார் 1,95,173 கோடி ரூபாய என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டின் மொத்த வருவாய் வரவுகளில் SOTR 75.3% பங்கினைக் கொண்டுள்ளது.
- அதன் கூறுகளில், 2023-24 ஆம் ஆண்டில் 61,960.29 கோடி ரூபாயாக இருந்த மாநில சரக்கு மற்றும் சேவை வரி (SGST) ஆனது 2024-25 ஆம் ஆண்டில் சுமார் 70,886.65 கோடி ரூபாயாக 14.4% அதிகரித்துள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில் 19,013.36 கோடி ரூபாயாக இருந்த மாநிலத்தின் பத்திரத்தாள் / முத்திரைத் தாள் மற்றும் பதிவுக் கட்டண வருவாய் ஆனது, 2024-25 ஆம் ஆண்டில் 21,878.27 கோடி ரூபாயாக சுமார் 15% உயர்ந்துள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில் 255.87 கோடி ரூபாயாக இருந்த நில வருவாயானது, 2024-25 ஆம் ஆண்டில் 277.72 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில் சுமார் 60,026.96 கோடி ரூபாயாக இருந்த விற்பனை, வர்த்தகம் போன்றவற்றின் மீதான வரிகளிலிருந்து (பெட்ரோல், டீசல் மற்றும் மதுபானங்கள் மீதான மதிப்புக் கூட்டல் வரி உட்பட) பெறப்பட்ட வருவாய் ஆனது 2024-25 ஆம் ஆண்டில் 62,335.08 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில் 10,774.29 கோடி ரூபாயாக இருந்த மாநிலக் கலால் வரிகள் (மது வருவாயைப் பிரதிபலிக்கும்) ஆனது 2024-25 ஆம் ஆண்டில் 11,055.41 கோடி ரூபாயாக அதிகரித்தன.
- 2023-24 ஆம் ஆண்டில் சுமார் 15,074.41 கோடி ரூபாயாக இருந்த, பிற வரிகள் மற்றும் கட்டணங்களிலிருந்து கிடைக்கும் வருவாய் ஆனது 2024-25 ஆம் ஆண்டில் 13,792.40 கோடி ரூபாயாகக் குறைந்தது.
- தமிழ்நாட்டின் மொத்த வருவாய் வரவுகளில் மீதமுள்ளவையானது வரி சாராத வருவாய், மத்திய அரசின் வரிகளில் உள்ள மாநில அரசின் பங்கு மற்றும் மத்திய அரசின் மானியங்கள் ஆகியவற்றிலிருந்து வருகின்றன.
- மத்திய வரிகளில் 2024-25 ஆம் ஆண்டிற்கான மாநில அரசின் பங்கு 52,491.88 கோடி ரூபாயாக இருந்தது.
- இது 2024-25 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீடுகளில் கணிக்கப்பட்டவற்றுடன் ஒத்துப் போகிறது.
- 2024-25 ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் மானிய உதவியானது 16,509.38 கோடி ரூபாயாக இருந்தது என்ற நிலையில் இது 2024-25 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீடுகளில் 20,538.40 கோடி ரூபாயாக இருந்தது.

- 2024-25 ஆம் ஆண்டில் 31,388.70 கோடி ரூபாயாக இருந்த வரி சாராத வருவாய் ஆனது, திருத்தப்பட்ட மதிப்பீடுகளில் 28,124 கோடி ரூபாயாக இருந்தது.
- இந்தக் கூறுகளை உள்ளடக்கி, CAG மதிப்பீட்டின் முதல் நிலை புள்ளி விவரங்களின் படி, 2024-25 ஆம் ஆண்டில் மாநிலத்தின் மொத்த வருவாய் வரவுகள் ஆனது 2,80,615.49 கோடி ரூபாயாக இருந்தன.
- 2024-25 ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாய் வரவுகள் மதிப்பீடு ஆனது 2,93,906.41 கோடி ரூபாயாக திருத்தப்பட்டது.




## தமிழ்நாட்டின் மின்சாரத் தேவை 2025





- மாநிலத்தின் சில பகுதிகளில் மழை பெய்ததால், கடந்த ஆண்டை விட இந்த ஆண்டின் கோடையில் தமிழ்நாட்டின் மின்சாரத் தேவை குறைந்துள்ளது.
- தமிழ்நாடு மாநிலத்தில் 2024 ஆம் ஆண்டு மே 02 ஆம் தேதியன்று 20,830 மெகாவாட் என்ற உச்சகட்ட மின் தேவை பதிவானது.
- 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் தேதியன்று சுமார் 454.32 மில்லியன் அலகுகள் என்ற அதிகபட்ச தினசரி நுகர்வு பதிவாகியுள்ளது.

- 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் மாநிலத்தின் உச்ச கட்ட மின்சாரத் தேவையானது 19,864 மெகாவாட் ஆகவும், ஒட்டு மொத்த மின்சாரத் தேவை சுமார் 11,705 மில்லியன் அலகுகளாகவும் இருந்தது.
- தெற்குப் பிராந்திய மின்சார விநியோக மையத்தின் தரவுகளின்படி, மே 16 ஆம் தேதி அன்று பூர்த்தி செய்யப்பட்ட அதிகபட்ச மின்சாரத் தேவை 18,868 மெகாவாட் ஆகும்.

# சர்வதேசச் செய்திகள்

## சாகர்மாதா சம்பத்

- சாகர்மாதா சம்பத் தொடக்க விழாவானது நேபாளத்தின் காத்மாண்டு நகரில் நடத்தப் பட்டது.
- இந்த உயர்மட்ட உலகளாவிய பேச்சுவார்த்தையின் கருத்துரு, "Climate Change, Mountains, and the Future of Humanity" என்பதாகும்.
- இந்த ஒரு நிகழ்வில், பலவீனமான மலைச் சுற்றுச்சூழல் அமைப்புகளை மிகவும் நன்கு பாதுகாப்பதற்காக இந்தியா ஐந்து அம்ச உலகளாவியச் செயல் திட்டத்தினை முன் வைத்தது.
- அவையாவன;
    - மேம்படுத்தப்பட்ட அறிவியல் பூர்வ ஒத்துழைப்பு
    - பருவநிலை மீள்தன்மையை உருவாக்குதல்
    - மலை வாழ் சமூகங்களை மேம்படுத்துதல்
    - பசுமை நிதி வழங்குதல்
    - மலைகளின் சூழல் பற்றிய தகவல்களை அங்கீகரித்தல்




## ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையேயான முதல் நேரடிப் பேச்சுவார்த்தை


- ரஷ்யா மற்றும் உக்ரைனிய நாடுகளின் பேச்சுவார்த்தையாளர்கள் கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெறாத தங்கள் முதல் நேரடியான அமைதிப் பேச்சு வார்த்தைக்காக இஸ்தான்புல் நகரில் கூடினர்.

- இரு நாடுகளும் தலா 1,000 போர்க் கைதிகளை விடுவிக்க ஒப்புக் கொண்டன.
- ஆனால் நிபந்தனையற்றப் போர் நிறுத்தத்திற்கான உக்ரைனின் அழைப்பை ரஷ்யா நிராகரித்தது.
- ரஷ்யா முதன்மையாக அது கோரும் பிரதேசத்தை விட்டுக் கொடுக்கவும், உக்ரைனின் நேட்டோ உறுப்பினர் அந்தஸ்து பெறும் விருப்பத்தினைக் கை விட்டு நடுநிலை நாடாக மாறவும் கோரியது.
- ரஷ்யாவானது கிரிமியா (2014) மற்றும் டொனெட்ஸ்க், லுகான்ஸ்க், கெர்சன் மற்றும் சபோரிஷியா (2022 ஆம் ஆண்டு முதல்) ஆகியவற்றினை உரிமை கோருகிறது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இந்தியாவின் விண்வெளி சார் ஊட்டச்சத்துப் பரிசோதனைகள்





- விண்வெளியில் மனித உயிர்கள் மிக நன்கு நிலை பெற்று வாழும் நிலையை ஆய்வு செய்வதற்காக வேண்டி இந்தியா தனது முதல் உயிரியல் பரிசோதனைகளை சர்வதேச விண்வெளி நிலையத்தில் (ISS) நடத்த உள்ளது.

- இந்தத் தனித்துவமான சோதனைகள் ஆனது, உயிரித் தொழில்நுட்பத் துறையுடன் இணைந்து இஸ்ரோ நிறுவனத்தின் தலைமையில் BioE3 என்ற முன்னெடுப்பின் கீழ் மேற்கொள்ளப் படுகின்றன.
- நீண்ட கால அளவு விண்வெளிப் பயணங்களுக்கு ஊட்டச்சத்து நிறைந்த சாத்தியமான உணவுப் பொருளாக உண்ணக் கூடிய நுண்ணுயிரிகளின் வளர்ச்சியில் நுண் ஈர்ப்பு விசை மற்றும் விண்வெளி கதிர்வீச்சின் தாக்கத்தை அக்குழு ஆராய உள்ளது.
- இந்த ஆய்வின் முடிவுகள் விண்வெளிச் சூழல்களில் பயன்படுத்த எதுவாக மிகவும் பொருத்தமான நுண்ணுயிரி இனங்களை அடையாளம் காண உதவும்.
- நுண்ணுயிரிப் பாசிகள் விண்வெளியில் வாழ்வதற்கு ஏற்ற சூழலைத் தக்க வைக்க சிறந்த உயிரிகளாக அவற்றை மாற்றுகின்ற பல முக்கியத் தன்மைகளைக் கொண்டு உள்ளன.
- சில இனங்கள் சுமார் 26 மணி நேரத்திற்குள் வளரும் என்பதால் அவை மிகக் குறுகிய வாழ்க்கைச் சுழற்சியைக் கொண்டுள்ளன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## உலகளாவிய நதிகளில் நுண்ணுயிர்க் கொல்லிகளின் மாசுபாடு




- மனித நுண்ணுயிர்க் கொல்லிகளின் பயன்பாட்டின் காரணமாக ஏற்பட்ட உலகளாவிய நதி மாசுபாட்டின் அளவை இந்த ஆய்வு மதிப்பிட்டுள்ளது.
- 2012-2015 ஆம் ஆண்டு முதல், அதிகம் பயன்படுத்தப்படும் சுமார் 40 நுண்ணுயிர்க் கொல்லிகளில் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 29,200 மெட்ரிக் டன்கள் மக்களால் நுகரப் படுகின்றன.
- அந்த நுண்ணுயிர்க் கொல்லிகளில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு ஆனது, அதாவது சுமார் 8,500 மெட்ரிக் டன்கள் உலகளாவிய ஆறுகளில் கலக்கப்பட்டன.
- உலகில் அதிகம் பயன்படுத்தப்படும் நுண்ணுயிர்க் கொல்லியான அமோக்ஸிசிலின், குறிப்பாக தென்கிழக்கு ஆசியாவில் ஆபத்தான அளவில் காணப்பட வாய்ப்புள்ளது.
- பல்வேறு பாக்டீரியா தொற்றுகளுக்குச் சிகிச்சையளிப்பதற்கு வேண்டி நுண்ணுயிர்க் கொல்லிகள் மிக முக்கியமானவையாகும்.
- இவை மக்கள், கால்நடைகள் மற்றும் வளர்ப்பு மீன்களுக்கு பரவலாக வழங்கப்

படுகின்றன ஆனால் இந்த மருந்துகள் உடலால் ஓரளவு மட்டுமே அவற்றால் உறிஞ்சப் படுகின்றன.

- வெளியேற்றப்படுகின்ற அதிகளவிலான நுண்ணுயிர்க் கொல்லிகள் சுற்றுச்சூழலில், குறிப்பாக நீர்நிலைகளில் நுழைகின்றன.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உணவு நெருக்கடிகள் குறித்த உலகளாவிய அறிக்கை 2025

- "2025 ஆம் ஆண்டு உணவு நெருக்கடிகள் குறித்த உலகளாவிய அறிக்கையானது" (GRFC) உணவுப் பாதுகாப்பு தகவல் வலையமைப்பு (FSIN) என்ற அமைப்பினால் வெளியிடப் பட்டது.
- உலகெங்கிலும் உள்ள சுமார் 295 மில்லியன் மக்கள் தற்போது கடுமையான பட்டினி நிலையை எதிர்கொண்டு வருகின்றனர்.
- இது 2020 ஆம் ஆண்டில் இருந்த நிலையை விட இரண்டு மடங்கு அதிகமாகும், மேலும் இது தொடர்ச்சியான ஆறாவது வருடாந்திர அதிகரிப்பைக் குறிக்கிறது.
- மோதல்களால் ஏற்படும் நெருக்கடிகள் நிலவும் நைஜீரியா, சூடான் மற்றும் மியான்மர் போன்ற 19 நாடுகளில் மோசமடைந்து வரும் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மை நிலவுகிறது.
- ஊட்டச்சத்து நெருக்கடிகள் உள்ள 26 நாடுகள் / பிராந்தியங்களில், 6–59 மாத வயது உடைய சுமார் 37.7 மில்லியன் குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப் பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

| Phase | Phase description and priority response objectives |
|---|---|
| **Phase 1** None/Minimal | Households are able to meet essential food and non-food needs without engaging in atypical and unsustainable strategies to access food and income. Action required to build resilience and for disaster risk reduction. |
| **Phase 2** Stressed | Households have minimally adequate food consumption but are unable to afford some essential non-food expenditures without engaging in stress-coping strategies. Action required for disaster risk reduction and to protect livelihoods. |
| **Phase 3** Crisis | Households either:<br>• have food consumption gaps that are reflected by high or above-usual acute malnutrition; or<br>• are marginally able to meet minimum food needs but only by depleting essential livelihood assets or through crisis-coping strategies.<br>URGENT ACTION required to protect livelihoods and reduce food consumption gaps. |
| **Phase 4** Emergency | Households either:<br>• have large food consumption gaps which are reflected in very high acute malnutrition and excess mortality; or<br>• are able to mitigate large food consumption gaps but only by employing emergency livelihood strategies and asset liquidation.<br>URGENT ACTION required to save lives and livelihoods. |
| **Phase 5** Catastrophe/ Famine | Households have an extreme lack of food and/or cannot meet other basic needs even after full employment of coping strategies. Starvation, death, destitution and extremely critical acute malnutrition levels are evident. (For Famine classification, area needs to have extreme critical levels of acute malnutrition and mortality.)*<br>URGENT ACTION required to revert/prevent widespread death and total collapse of livelihoods. |

# இதரச் செய்திகள்

## காந்தார் பிராண்ட்ஸ் 2025 அறிக்கை

- உலகின் ஒரு முன்னணி சந்தைப்படுத்தல் தரவு மற்றும் பகுப்பாய்வு நிறுவனமான காந்தார், 20வது BrandZ மிகவும் மதிப்புமிக்க உலகளாவிய தயாரிப்புகள் பட்டியலினை

வெளியிட்டுள்ளது.

- ஆப்பிள் நிறுவனமானது நான்காவது ஆண்டாக 1.3 டிரில்லியன் டாலர்கள் தயாரிப்பு நிறுவன/பிராண்ட் மதிப்புடன் அதன் முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- அதைத் தொடர்ந்து கூகிள், மைக்ரோசாப்ட், அமேசான் மற்றும் என்விடியா ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- இந்தியாவைச் சேர்ந்த டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (TCS) நிறுவனமானது, உலகளவில் 100 மிகவும் மதிப்பு மிக்கத் தயாரிப்புகளில் ஒன்றாக (45வது) பட்டியலிடப் பட்டுள்ளது.

| Rank 2025 | Brand | Brand Value 2025 (US$ m) | YoY Change (%) |
|---|---|---|---|
| 1 | Apple | 1,299,655 | 28% |
| 2 | Google | 944,137 | 25% |
| 3 | Microsoft | 884,816 | 24% |
| 4 | Amazon | 866,118 | 50% |
| 5 | NVIDIA | 509,442 | 152% |
| 6 | Facebook | 300,662 | 80% |
| 7 | Instagram | 228,947 | 101% |
| 8 | McDonald's | 221,079 | 0% |
| 9 | Oracle | 215,354 | 48% |
| 10 | Visa | 213,348 | 13% |

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★